**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை :– திருமதி S. மும்தாஜ், B.Sc.,B.L.,**
**சார்பு நீதிபதி, சீர்காழி.**

––––

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07ம் நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண். 369/2022 –ல் இடைமனு எண். 4/2025**

ரெங்கசாமி ..மனுதாரர் / வாதி

..எதிர்..

1. தனலெட்சுமி
2. அஞ்சலைதேவி
3. கற்பகம்
4. சாந்தி
5. பழனிவேல் .......1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

6. மைனர். பிரியதர்ஷினி
7. மைனர். தேவதர்ஷினி ....6, 7 எதிர்மனுதாரர்கள்/ 6,7 பிரதிவாதிகள் சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

(6, 7 மைனர் எதிர்மனுதாரர்கள் சார்பாக
அவர்களது தாயாரும் காப்பாளருமான
1ம் பிரதிவாதி/1ம் எதிர்மனுதாரர்)

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 04.02.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். வேணுகோபாலன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 6, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்ற காப்பாளர்/ வழக்கறிஞர் திரு. எஸ். அரவிந்தராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/வாதியால் 6, 7 எதிர்மனுதாரர்களை வழக்கில் 6, 7 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல் நடத்த வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1, விதி 10 மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.02.07 17:49:57 +0530

**2. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. மனுதாரருக்கு உடல்நலக்குறைவால் மனுதாரரின் மகன் வழக்கை கவனித்து வருகிறார். மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் பேரில் பாகப்பிரிவினைக்காகவும், இதர பரிகாரங்களுக்காகவும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் விசாரணை துவங்கப்பெற்று அதில் வாதி தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் முடிவடைந்தும் பிரதிவாதி தரப்பில் DW1 தரப்பில் முதன்மை சாட்சியம் அளிக்கப்படடும், DW1–ஐ குறுக்கு விசாரணை செய்ய கெடு போடப்பட்டும் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்/வாதியால் மேற்படி வழக்கு போடப்பட்ட காலத்தில் 1ம் பிரதிவாதிக்க குழந்தைகள் இருப்பது தெரியாமல் வழக்கு தொடர்ந்து வழக்கிற்கு பின்னிட்டு குழந்தைகள் உள்ள விபரம் தெரியவந்தது. மேற்படி வழக்கில் மனுதாரர் காலஞ்சென்ற சகோதரரான பட்டுசாமியின் வாரிசாக அவரது மனைவி 1ம் பிரதிவாதி மட்டும் வழக்கில் சேர்க்கப்பட்டும் அவர்களது குழந்தைகள் வழக்கில் சேர்க்கப்படாமல் உள்ளது. மேற்படி 6, 7 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 6, 7 பிரதிவாதிகளாக சேர்ப்பதால் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது குழந்தைகளுக்கு 1/5 பாகமும் மற்ற பாகஸ்தர்களுக்கு தலா 1/5 பாகமும் கிடைக்கக்கூடியதாய் உள்ளது, எனவே மனுவை அனுமதிக்க கோரியுள்ளார்.

**3. 6, 7ம் எதிர்மனுதாரார்கள் சார்பாக அவர்களது தாயாரும் காப்பாளருமான 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

மனுதாரர் மனுவில் கூறியுள்ளது போல் மறைந்த பட்டுசாமியின் மனைவியான 1ம் பிரதிவாதி மட்டும் வழக்கில் சேர்க்கப்பட்ட நிலையில், அவரது வாரிசுகளான 6, 7 எதிர்மனுதாரர்கள் விடுபட்டுள்ளனர் என்ற கூற்று உண்மை. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் 1ம் பிரதிவாதிக்கு குழந்தைகள் இருப்பது தெரியாமல் வழக்கு தொடரப்பட்டது என்பது ஏற்கதக்கதல்ல. ஏனென்றால் 5ம் எதிர்மனுதாரர் தனது எதிர் வழக்குரையில் 2ம் பாராவில்1ம் பிரதிவாதிக்கு குழந்தைகள் உள்ளனர் அதனை மனுதாரர்/வாதி மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என கூறியுள்ளார். மேலும் 6 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகளாகச் சேரப்பதற்கு 6, 7 எதிர்மனுதாரர்கள்/நீதிமன்ற காப்பாளர் தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. எனவே 6 மற்றும் 7 எதிர்மனுதாரர்களை மேற்படி வழக்கில் சேர்க்க அனுமதி வழங்க கோரியுள்ளார்.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.02.07 17:50:02 +0530

4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**5. தீர்வு.**

மனுதாரர் தரப்பில் மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், மனுதாரர் சார்பாக மனுதாரரின் மகன் வழக்கை கவனித்து வருவதாகவும், அசல் வழக்கை பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்களுக்காக தாக்கல் செய்யப்பட்டு, வழக்கில் விசாரணை துவங்கி வாதி தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 முதன்மை சாட்சியம் அளிக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு கெடு போடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 1ம் பிரதிவாதிக்கு குழந்தைகள் உள்ள விவரம் தெரியாமல் வழக்கு தொடந்து, பின்னிட்டு குழந்தைகள் உள்ள விவரம் தெரிய வந்தது என்றும், மேற்படி வழக்கில் வாதியின் காலஞ்சென்ற சகோதரரான பட்டுசாமியின் மனைவி முதல் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டும், அவரது குழந்தைகள் சேர்க்காமல் உள்ளது என்றும், எனவே காலஞ்சென்ற பட்டுசாமியின் வாரிசுகளை வழக்கில் 6, 7 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி வேண்டியுள்ளார். மனுதாரரின் மனுவிற்கு 6, 7 எதிர்மனுதாரர்கள்/சேர்க்கப்பட வேண்டிய தரப்பினர்கள் சார்பாக நீதிமன்ற காப்பாளர் தாக்கல் செய்துள்ள எதிருரையில் 1ம் பிரதிவாதிக்கு குழந்தைகள் இருப்பது தெரியாமல் வழக்கு தொடரப்பட்டது என்பது ஏற்புடையதல்ல என்றும், இறந்த பட்டுசாமியின் விடுப்பட்ட வாரிசுகளான 6, 7 எதிர்மனுதாரர்களை வழக்கில் சேர்ப்பது சட்டப்படி கட்டாயமானது என்றும், முதல் பிரதிவாதி மற்றும் மைனர் குழந்தைகளுக்கு சேர வேண்டிய 1/5 பங்கு உட்பட, மற்ற பாகஸ்தர்களுக்குச் சேர வேண்டிய பாகங்களுக்கும் எவ்வித பாதிப்பும் இல்லாமல் உறுதி செய்யப்படவும், மைனர் குழந்தைகளின் உரிமையை நிலைநாட்டப்பட வேண்டியும் மைனர் 6, 7 எதிர் மனுதாரர்களை வழக்கில் சேர்க்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

6. இருதரப்பும் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசிலிக்கப்பட்டன. அசல் வழக்கானது பாகப்பிரிவினை வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு பி.வா.சா.1 குறுக்கு விசாரணைக்கு போடப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்/வாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.02.07 17:50:07 +0530

இறந்த பட்டுச்சாமியின் மனைவி அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். இறந்த பட்டுசாமியின் பிள்ளைகளாகிய 6, 7 மைனர் எதிர்மனுதாரர்கள் வழக்கில் அவசிய தரப்பினர்கள் என்பதால், மேற்படி 6, 7 எதிர்மனுதாரர்களை வழக்கில் 6, 7 பிரதிவாதிகளாக சேர்க்க அனுமதி கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்கலாம் என்று தீர்மானித்து இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**7. முடிவாக**, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.02.07 17:50:11 +0530

சார்பு நீதிபதி.
சீர்காழி

**<u>பின் இணைப்பு</u>**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்** - இல்லை-
**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்** - இல்லை-

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.02.07 17:50:16 +0530

சார்பு நீதிபதி,
சீர்காழி.

**<u>உத்தரவு</u>**
இ.ம.எண்.4/2025
அ.வ.எண்.369/2022-ல்
நாள் -07.02.2026